R5350

## ELECTING ELDERS AND DEACONS

# மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபை கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றவர்கள் முழுமையாக அர்ப்பணம் செய்து, அதை அடையாளப்படுத்தியிருக்கிற ஒப்புரவாகுதலின் விசுவாசிகள் மட்டுமே என்று ஆசிரியர் சமீபத்தில் அறிவித்த போது ஒரு சிறு தவறு நடந்து விட்டது. அந்தத் தவறு அடையாளப்படுத்துதல் என்ற வார்த்தையை சேர்த்ததேயாகும். தண்ணீர் முழுக்காட்டுதலின் உண்மையான சிறப்பையும் முக்கியத்துவத்தையும் காணும் முன்பு நம்மில் அநேகர் உண்மையான கிறிஸ்தவர்களாகவும், ''உண்மையாக கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், ''பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையின்'' (எபிரேயர் 12:23) அங்கத்தினர்களாவும் இருந்தோம். இப்படிப்பட்டவர்கள் சபையில் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றிருக்கின்றனர் என்று நாம் எப்பொழுதும் கருதுகிறோம். (வேதாகம பாடங்கள், தொகுதி 6ஐப் பார்க்கவும்) ஆம், வாக்களிப்பது அவர்களது கடமை. அவர்களது தீர்மானத்தின்படி, சபையின் ஊழியர்களின் விஷயத்திலும் கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவது அவர்களது கடமையாக இருக்கிறது.

ஆனால் நாங்கள் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், தனது அர்ப்பணத்தை முறையாக அடையாளப்படுத்துகிறது பற்றிய வேதாகம போதனைகளை இன்னும் ஏற்றுக்கொள்ளாத எந்த சகோதரனும் மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ முறைப்படி நியமிக்கப்பட தேவையான வளர்ச்சி அடைந்திருக்க மாட்டார் என்பதேயாகும். கவனக்குறைவினாலேயே இப்படிப்பட்டவர் வாக்களிக்கக்கூடாது என்ற கருத்தை சேர்த்துவிட்டோம்.

சபை தேர்தலுக்கு முன் மொழிதலில் சில சபைகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஒரு சகோதரனுடைய தகுதியை சரியாக கவனிக்காமல் அவரை ஒரு மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ முன் மொழியப்படுகிறது. அது வழி மொழியவும் படுகிறது. முழு சபையும் அந்த சகோதரன் மேல் உள்ள அன்பாலும் அவருக்கு எதிராக வாக்களிக்க மனமில்லாமல் இருக்கின்றனர்.

சபையில் எந்த ஊழியத்திற்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். மூப்பரானவர் போதிக்க வல்லவராகவும், பெருந்தன்மை உடையவராகவும், தேவையானவர்களுக்கு ஆலோசனை கொடுக்க முடிந்தவராகவும், தேவனுடைய வார்த்தைகளை ஆழமாக ஆராய்கிறவராகவும் சபையில் செல்வாக்கு உடையவராகவும் ஞானமான ஆலோசகராகவும் இருக்க வேண்டும். இந்த நற்குணங்கள் யாவற்றையும் ஒருவர் சரிசமமாக பெற்றிருக்க இயலாது. ஒருவர் ஒரு குணத்தை அதிகமாகவும் மற்றொருவர் வேறொரு குணத்தை அதிகமாகவும் பெற்றிருக்கலாம். ஆனால் அனைவரும் அவைகளில் சிலவற்றையாகிலும் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் அவரது தேர்வில் எந்தவித சாக்கு போக்கும் இருக்காது. இதேபோல ஒரு உதவிக்காரர் ஊழியம் செய்ய நேரம் ஒதுக்க முடிகிறவராகவும், வருங்காலத்தில் மூப்பராவதற்கு ஏதுவான சில தகுதிகள் உடையவராகவும் சபைக்கு ஊழியம் செய்ய விருப்பம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை முன்மொழியும் காரியத்தில் ஏதாவது சிரமம் இருக்குமானால், பெரும்பாலானவர்கள் விரும்பினால், வாக்குச்சீட்டு முறைமையை பின்பற்றுவது ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. இதை செயல்படுத்த காகித பென்சிலும் துண்டு காகிதங்களும் தேவைப்படும். வாக்களிப்பவர்கள் பின்வருமாறு எழுத வேண்டும்.ந்' ான்.......... சபையில் கீழ்கண்ட மூப்பர்களை ......... மாதங்களுக்கு இருக்கும்படி முன் மொழிகிறேன்.'' கீழே பெயர்கள் எழுதப்பட வேண்டும். சபையார் எண்ணிக்கையை கூட்டவோ குறைக்கவோ விரும்பினால் முன்மொழிதலுக்கு பிறகு தேர்தல் சமயத்தில் அதைச் செய்யலாம்.

வாக்குச்சீட்டு சேகரிக்கப்பட்ட பிறகு முடிவுகள் பட்டியலிட்டு சபையில் வெளிப்படையாக அறிவிக்கப்படவேண்டும். அதன்பிறகு சபையானது எத்தனை மூப்பர் வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். மூன்று பேர் தேவை என்று தீர்மானிக்கப்பட்டால், அதிகமாக முன் மொழிதல் உள்ள ஆறுபேர் தேர்தலில் நிற்க அனுமதிக்கப்பட்டு, கைகளை நீட்டுவதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற மூன்று பேர் சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும். இன்னொரு முறை என்னவென்றால் வாக்கு செலுத்தினவர்களில் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமாக முன் மொழியப் பெற்றவர்கள் அனைவரையும் முடிந்தமட்டில் ஏகமனதாக தேர்ந்தெடுப்பதாகும். இந்த ஏற்பாடு சிறுபான்மையானவர்கள் கூட மூப்பர் பதவிக்கு வருவதற்கு சந்தர்ப்பமளிப்பதாகும்.

எப்பொழுதும் மனதில் நிறுத்தப்பட வேண்டிய கருத்து என்னவென்றால், சபையின் தீர்மானம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். பெரும்பான்மையானவர்கள் ஆளுகை செய்தாலும் மூப்பர்கள் சிறுபான்மையானவர்களுக்கு சில விஷயங்களில் இணங்குவது முழு சபையின் உணர்வுகளும் பிரதிபலிப்பதாக இருக்கும். பலனை எப்படி அடைவோம் என்பது முக்கியமல்ல, நாம் ஞானமாக செய்வோம். வேறே முடிவை பெற்றால் அது ஞானமற்றதாகவும் சபையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கு ஆபத்து உண்டாக்குவதாக காணப்படும். சகோதர அன்பு எப்பொழுதும் அனுதாபம், இரக்கம், அன்பு மற்றும் முக்கியமான கொள்கை இல்லாத பட்சத்தில் விட்டுக்கொடுத்து செல்வதாக இருக்கும்.